## 4. SGSY

### 4.11 2001–02 – 10 மீனவர் அங்காடிகள் மற்றும் 9 ஏலக்கூடங்கள் – ரூ.2.56 கோடியில் அமைத்தல்

கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் (மீன்G) துறை

அரசாணை (நிலை) எண். 102 நாள்: 26.6.2000

படிக்க :

1. அரசு நேர்முகக் கடித எண். 4663/மீன் G/2000–1 கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் துறை, நாள் 24.03.2000.
2. மீன்துறை இயக்குநர் கடித எண். ஆர் 1/13796/2000, நாள் 22.04.2000. 8.5.2000, 9.5.2000, மற்றும் 31.5.2000
3. அரசு நேர்முகக் கடித எண். 21662/எஸ்.ஜி.எஸ்.ஒய்/ 2000 ஊரக வளர்ச்சித் துறை நாள் 13.6.2000 மத்திய அரசுக்கு முகவரியிட்டது

**ஆணை**

24.3.2000 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2000–2001–ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தை சட்டமன்றப் பேரவையில் முன்வைத்து உரையாற்றும் பொழுது மீனவர்கள், மீன்களை விற்பதற்குப்படும் சிரமங்களை நீக்குவதற்கும் சுகாதாரமான முறையில் விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும், மீனவர் அங்காடி தமிழகத்தில் முதற்கட்டமாக 10 இடங்களில் அமைக்கப்படும் என்றும் நவீன வசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை கொண்ட விற்பனைக் கூடங்களாக அவை அமைக்கப்படும் என்றும் மீன்கள் தரமாகவும், கெடாமலும் விற்பதற்கு வசதியாக ஒட்டு மொத்த ஏலம் நடக்கும் இடங்களில் ஏலக் கூடமும் (Action Hall) உலர்களமும் (Drying Yard) அமைத்துக் தரப்படும் என்றும் அறிவித்தார்கள்.

2) இவ்வறிவிப்பினை செயலாக்கும் பொருட்டு, மீன் துறை இயக்குநர், மண்டல மீன்துறை உதவி இயக்குநர்கள், மீனவர் கூட்டுறவு சங்கங்கள், மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் முக்கியமானவர்களை அழைத்து கூட்டம் நடத்தியும் அங்காடி அமையும் இடம் அங்காடிக்கும் மீன்பிடி கிராமங்களுக்கும் இடையே உள்ள தூரம் மற்றும் விற்கப்பட வேண்டிய மீனின் அளவு ஆகியவற்றை கணக்கிட்டும் கீழ்க்கண்டுள்ள 10 இடங்களில் மீனவர் அங்காடிகள் அமைக்க ரூ.182.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரித்து அரசிற்கு அனுப்பியுள்ளார்–

| வ.எண். | மாவட்டம் | அங்காடி அமையும் இடம் |
|---|---|---|
| 1 | சென்னை | இராயபுரம் |
| 2 | காஞ்சிபுரம் | தாம்பரம் |
| 3 | கடலூர் | கடலூர் பழைய நகரம் |
| 4 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 5 | தஞ்சாவூர் | பட்டுக் கோட்டை |
| 6 | புதுக்கோட்டை | அறந்தாங்கி |
| 7 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 8 | திருநெல்வேலி | வள்ளியூர் |
| 9 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 10 | கன்னியாகுமரி | மார்த்தாண்டம் |

3) சுகாதாரமான முறையில் 50 கடைகளோடு, மீனவர் அங்காடி ஒன்று அமைக்க 15 செண்ட் நிலமும், உலர்களம் மற்றும் ஏலக்கூடம் அமைத்திட 4 செண்ட் வீதம் 8 செண்ட் நிலமும் தேவைப்படும் எனவும், மீனவர் அங்காடியில் 2 டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன வசதி அமைக்கப்படவுள்ளது எனவும் மீன்துறை இயக்குநர் அரசிற்கு தெரிவித்துள்ளார். இத்திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீட்டினையும், மீனவர் அங்காடியின் வடிவமைப்பினையும் மீன்துறை இயக்குநர் அனுப்பியுள்ளார். இத்திட்டத்திற்கு செலவினமான ரூ. 182.00 இலட்சத்தினை ஊரக வளர்ச்சி

முகமையிலிருந்து பெற்றுத்தர ஏற்பாடு செய்திடவும், இதற்கு காலதாமதமாகும் எனில் உடனடியாக இப்பணியினைத் துவக்கிட ஏதுவாக ரூ. 182.00 இலட்சத்திற்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு பெற்றுத் தர மீன்துறை இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

4) மீன்துறை இயக்குநரின் செயற்குறிப்பு அரசினால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. மீன்துறை இயக்குநர் தமது 9.5.2000 மற்றும் 31.5.2000 நாளிட்ட கடிதங்களில் அரசுக்கு அனுப்பிய திட்ட செயலாக்க அறிக்கை மற்றும் மீனவர் அங்காடியின் வடிவமைப்பு ஆகியவற்றிற்கு அரசு ஒப்புதல் அளிக்கிறது (இணைக்கப்பட்டுள்ளது)

5) மேலும், தமிழ்நாட்டில் 10 இடங்களில் மீனவர் அங்காடிக்கும், 9 இடங்களில் ஏலக்கூடம் மற்றும் உலர்களம் அமைக்கவும் தேவைப்படும் செலவினமான ரூ. 182.00 இலட்சத்தினை ஊரக வளர்ச்சித் திட்டமான சுதந்திரப் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் (Swarnjayanti Gram Swarozgar Yojana) சிறப்புத் திட்டத்தில் ஏற்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு பெற ஊரக வளர்ச்சித் துறையால் தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6) மேற்கண்ட சூழ்நிலையில், மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு பெற காலதாமதம் ஏற்படும் என்பதாலும், மீனவர் அங்காடி அமைக்கும் திட்டத்தின் செயல்பாட்டில் தாமதத்தை தவிர்க்க வேண்டியும், இணைப்பில் கண்டுள்ளவாறு 10 இடங்களில் மீனவர் அங்காடிகளும், 9 இடங்களில் ஏலக்கூடம் மற்றும் உலர்களம் அமைக்கவும் (சென்னை) இராயபுரம் தாலுக்காவில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி சிறப்பு நிதி ஒதுக்கீடாக ரூ. 182.00 இலத்சத்திற்கு செலவின ஒப்பளிப்பும், (ரூபாய் ஒரு கோடியே என்பத்து இரண்டு இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளித்தும் அரசு இசைவுடன் ஆணையிடுகிறது

7) இச்செலவினம் ஒரு புதுப்பணி குறித்து செலவினமாகும். காலப்போக்கில் தமிழக சட்டமன்ற பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதலை எதிர்பார்த்து இச்செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன் செலவினத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ.I) குறைத்து தேவையாகும் விண்ணப்பப் படிவத்தில் அரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு மீன்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8) மேலே பத்தி 4–ல் ஒப்புதளிக்கப்பட்ட மீனவர் அங்காடிகளின் கட்டுமானப் பணிகளை சென்னை மீன்பிடி திட்ட வட்ட கண்காணிப்பு பொறியாளர் மேற்கொள்வார். மீன்துறை இயக்குநர் மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையினை பெற்று சென்னை மீன்பிடி திட்ட வட்ட கண்காணிப்பு பொறியாளருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9) மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கலாம்–

> “4405. மீன்வளம் குறித்த முலதனச் செலவு–105. பதப்படுத்துதல், பாதுகாத்தல், விற்பனைச்
> செய்தல்–ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II. மாநிலத் திட்டம்–JF.
> தமிழ்நாட்டில் மீனவ அங்காடிகள் கட்டுதல்–16. பெரும்பணிகள்”
> (து.தொ.கு.எண்.4405–00–105– JF –1609)

10) மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பிற்கு மீன்துறை இயக்குநர், மதிப்பீட்டு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பட்டு அதிகாரி ஆவார்.

11) கணக்குகளில் மேற்சொன்ன புதிய தலைப்பினைத் தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

12) இவ்வாணை நிதித்துறையின் ஒத்திசைவோடு வெளியிடப்படுகிறது. (நிதித்துறை அ.சா.கு.எண். 47907/காபம்/ 2000, நாள் 26.6.2000)

(ஆளுநரின் ஆணைப்படி)

**மோகன் வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்